# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

Registered as Newspaper

20.12.2020 | ஞாயிற்றுக்கிழமை


மருதனார்மடம் கொத்தணி




### தெல்லிப்பழையில் இருவருக்கு இன்று தொற்று உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 20

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனுடன் மருதனார்மடம் கொத்தணியின் எண்ணிக்கை 90ஆக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இன்று 120 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 2பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஒ,5)

ஆட்சியமைப்பது தொடர்பில்

# ஈ.பி.டி.பி., முன்னணியுடன் பேச்சு நடத்துவோம்!!!

**தமிழ் அரசுத் தலைவர் மாவை. தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், டிசெம்பர் 20

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும், ஈ.பி.டி.பியுடனும் நாம் மீண்டும் பேச்சு நடத்துவோம். அத்துடன் எதிர்வரும் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறும் கலந்துரையாடல்களின் பின்னரே மாநகர சபையில் மேயருக்கு யாரை களமிறக்குவது என்பது தொடர்பில் தீர்மானிப்போம். இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார். 2

இலங்கையர்கள் நாடு திரும்ப

## வெளிவிவகார அமைச்சின் அனுமதி தேவையில்லை

கொழும்பு, டிசெ. 20

இலங்கையர்கள் தமது தாயகம் திரும்புவதற்கு வெளிவிவகார அமைச்சின் அனுமதியை இனிப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று சிவில் விமான போக்குவரத்து ஆணையகத்தின் தலைவர் உபாலி தர்மதாச தெரிவித்தார். எதிர்வரும் 26ஆம் திகதி இலங்கையின் விமான நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார். 2

## பலாலி விமான நிலையம் இப்போது திறக்கப்படாது

*அமைச்சர் பிரசன்ன ரணதுங்க*

யாழ்ப்பாணம், டிசெ. 20

எதிர்வரும் 26ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படுகின்றது. பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட ஏனைய விமான நிலையங்கள் திறப்பது தொடர்பில் அடுத்த மாதம் நடுப் பகுதியிலேயே ஆராயப்படும். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். 2

முல்லைத்தீவு மீனவர்கள்

## அமைச்சர் டக்ளஸை நம்பி போராட்டத்தை நிறுத்தினர்

முல்லைத்தீவு, டிசெ. 20

எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுக்களின் பின்னர், இந்திய மீனவர்களின் அத்துமீறல் இருக்காது. நீங்கள் என்மீது நம்பிக்கையிருந்தால் போராட்டத்தை நிறுத்துங்கள். இல்லையேல் தீர்வு வரும் வரையில் போராட்டத்தை தொடர்வதானால் தொடருங்கள். இவ்வாறு முல் 2

## சுத்தம்!



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் வாய்க்கால் இன்று துப்புரவு செய்யப்பட்டது. அதிலிருந்து மீட்கப்பட்ட குப்பைகளே இவை.

படம் ஐ.சிவசாந்தன்.

## தடுப்பூசி வாங்க 10பில். டொலர்கள் கடன்

கொழும்பு, டிசெ. 20

கொரோனா பெருந்தொற்றுக்கான தடுப்பூசி வாங்குவதற்காக 10 பில்லியன் டொலர்களை கடனாக உலக வங்கியிடம் கோரியுள்ளது இலங்கை. கொழும்பு ஊடகமொன்றுக்கு அரச உயர் அதிகாரியொருவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் 2

காணாமற்போன

## தந்தையும் மகளும் சடலங்களாக மீட்பு

*முல்லைத்தீவில் சோகம்*

முல்லைத்தீவு, டிசெ. 20

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் குளக்கட்டில் பயணித்த கப் வாகனம் தடம் புரண்டு குளத்தினுள் மூழ்கிய விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்வடைந்துள்ளது. குளத்தினுள் காணாமற்போன தந்தையும், மகளும் இன்று காலை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். 37 வயதுடைய தந்தையும், அவரது 2 வயது மகளுமே இன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். 2

# ஈ.பி.டி.பி.,...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. ஆகிய எமக்குச் சில சபைகளின் வரவு -செலவுத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு ஆதரவு வழங்கின. அந்த அடிப்படையில் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றிலும் அந்தக் கட்சிகளின் ஆதரவைக் கோரியிருந்தோம். ஆனால் அவர்கள் அந்தச் சபைகளில் எங்களைத் தோற்கடித்தனர்.
எதிர்வரும் 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் குறித்த சபைகளின் உறுப்பினர்கள், எமது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் முக்கிய கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது இரண்டு சபைகளிலும் மேயர் மற்றும் தவிசாளர் பதவிக்கு யாரைப் பிரேரிப்பது என்பது தொடர்பிலும் ஆராயப்படும்.
அத்துடன் இரண்டு சபைகளிலும் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஈ.பி.டி.பியுடனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் மீண்டும் பேச்சு நடத்துவோம், என்றார். (ஒ,5,22)

# பலாலி விமான நிலையம்..

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த கட்டுநாயக்க விமான நிலையம் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படவுள்ளது. ஏனைய விமான நிலையங்கள் இப்போது திறக்கப்படாது. அவை திறக்கப்படுவது தொடர்பில் அடுத்த மாத நடுப்பகுதியில்தான் ஆராயப்படும், என்றார். (ஒ,5,22)

# வெளிவிவகார...

இந்த முறையில் வரும் இலங்கையர்கள் பி.சி.ஆர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஒரு நாளைக்கு அதிகபட்சம் 3 ஆயிரத்து 500 பேருக்கு வாய்ப்பு வழங்கப்படும்.
விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக இலங்கைக்கு வருகை தர ரஷ்ய சுற்றுப்பயண குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஒ.இ)

# அமைச்சர்...

லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அமைச்சரின் வாக்குறுதியை ஏற்று போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆறாவது நாளாக தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களை இன்றையதினமே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் சந்தித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடற்படை அதிகாரியுடன் பேசியிருக்கின்றேன். இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்கள் வந்தால் தான் கைது செய்யுமாறு கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்தியத் தரப்பினர் கைது செய்த மீனவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க எம்மிடம் கோரியிருக்கின்றனர். நல்லெண்ணம் என்பது இந்தியத் தரப்பிலிருந்து வரவேண்டும் என்பதையும், இலங்கைத் தரப்பிலிருந்து வரவேண்டியதில்லை என்பதையும் அவர்களிடம் நான் சுட்டிக்காட்டியுள்ளேன்.

## சட்டத்தை கையிலெடுங்கள்

அத்துமீறிய இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை கட்டுக்குள் கொண்டுவரும்வரை கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள். இனிரும் காலங்களில் இப்பிரச்சினை இருக்காது என நினைக்கின்றேன். எதிர்வரும் காலங்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையிருந்து, கடற்படை கைது செய்யாதுவிட்டால் மீனவர்களை நீங்களே பிடிக்க முடியும்.
எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுக்களின் பின்னர், இந்திய மீனவர்களின் அத்துமீறல் இருக்காது என நினைக்கின்றேன். நீங்கள் என்மீது நம்பிக்கையிருந்தால் போராட்டத்தை நிறுத்துங்கள், இல்லையேல் தீர்வு வரும் வரையில் போராட்டத்தை தொடர்வதானால் தொடருங்கள், என்றார்.

## போராட்டம் முடிவு

அமைச்சரின் வாக்குறுதியை ஏற்று தொடர் போராட்டம் 6ஆம் நாளான இன்று முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (ஒ,246)

# தடுப்பூசி....

சபையின் நிறு வனமான உலக சுகாதார அமைப்பும் ஒரு சர்வதேச முயற்சியின் கீழ் இலங்கை மக்கள் தொகையில் 20 சதவீதத்தினருக்கு தடுப்பூசி வழங்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிலிருந்து நிதியுதவி பெறு வதற்கான சாத்தியக்கூறுகளையும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. (ம-இ)

# குளிரூட்டியில் ஜனாஸாவை வைப்பதற்குப் பரிசீலனை!

கொழும்பு, டிசெ. 21
கொரோனாவினால் உயிரிழந்த முஸ்லீம்களின் ஜனாசாக்களை குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் வைப்பது குறித்த திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன ஆங்கில இணையத்தளமொன்றிற்குத் தெரிவித்தார். கொரோனா வைரஸ் தொற்றிற்குள்ளானவர்களின் ஜனாசாவை நீண்டகாலம் ஏனையவர்களின் உடல்களுடன் உடற்கூற்றுப் பரிசோதனை அறையில் வைத்திருக்க முடியாது என்பதாலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். ஐந்து இடங்களில் இவ்வாறான குளிரூட்டப்பட்ட கொள்கலன்களை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ம-இ)

# தந்தையும்...

நேற்றைய தினம் 13 வயது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டிருந்தான்.
மல்லாவி செல்வபுரத்தைச் சேர்ந்தவர்கள் கப் வாகனத்தில் சென்றபோது வாகனம் குளத்தில் தடம்புரண்டு வீழ்ந்துள்ளதால் வாகனத்தில் பயணம் செய்த நால்வரும் குளத்தில் மூழ்கினர். இவர்களில் சிறுவன் ஒருவன் மாத்திரமே தப்பித்தான்.
மற்றைய சிறுவன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தான்.
வாகனத்தின் சாரதியான கிருஸ்ணபிள்ளை ரசீந்திரன் (வயது 37), அவரது இரண்டு வயது மகளான ரசிந்திரன் சார்ஜனா ஆகியோரை நேற்று இரவிரவாக தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு இன்று காலை கடற்படையினரின் உதவியுடன் இருவரின் உடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
விபத்து ஏற்பட்ட நேரத்திலிருந்து படையினர், பொலிஸார், பிரதேச சபையினர், பிரதேச செயலகத்தினர் நீர்பாசன திணைக்கள அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோர் தொடர்ச்சியாக இரவு இரவாக நின்று கடற்படையினரின் உதவியுடன் உடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,19)

# நீர்கொழும்பில் கொரோனா தீவிரம்!

கொழும்பு, டிசெ.20
நீர்கொழும்பு பொதுச் சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 302 ஆக அதிகரித்துள்ளது.
தனிமைப்படுத்தப்பட்டுள்ள தலாதுவ வீடமைப்புத் தொகுதியில் மேலும் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு இனங்காணப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது.
இதேவேளை, நீர்கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களில் 13 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் நீர்கொழும்பு பொதுச் சுகாதாரப் பிரிவில் தொற்றாளர்கள் எண்ணிக்கை 302 ஆக அதிகரித்துள்ளது.(றஜ)

# ஒழுக்காற்று நடவடிக்கைக்கான இடமாற்றம் நடைமுறையாகவில்லை

## யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த நிலைமை

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என அமைச்சு அறிவித்துள்ளபோதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவர் மேன்முறையீடு செய்துள்ளமையால் அது நடைமுறையாகவில்லை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் குறிப்பிட்டார்.
யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராக பணியாற்றும் எஸ்.சிவகுமாருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைக்கு அமைவாக, மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. 'தாங்கள் தொடர்பான அடுத்த ஒழுக்காற்று நடவடிக்கைக்கு தடையாக இருக்கும் என்று கவனிக்கப்பட்டமையால் அரச சேவை ஆணைக்குழுவின் சேவை நடைமுறை விதிப்படி யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த வேறு பொருத்தமான மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்ய கட்டளையிடப்பட்டதென 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது. அதன்படி மறு உத்தரவு வரும் வரை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்படுகின்றீர்கள்' என்று உள்ளகப் பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இருப்பினும் இந்த இடமாற்றம் ஒரு மாதத்துக்கு மேலாகியும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.
இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலரைக் கேட்டபோது, அவரது இடமாற்றக் கடிதம் தாமதமாகவே நேரில் எமக்கு கிடைத்தது. அத்துடன் அவர் அது தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ளார். இந்த இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கைக்குரிய இடமாற்றமா என்பது தெரியவில்லை என்று பதிலளித்தார். (ஒ,5)



# ஊரடங்கு தொடர்பில் இதுவரை முடிவில்லை

## சவேந்திர சில்வா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20

பண்டிகைக் காலத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பது தொடர்பிலோ அல்லது தனிமைப்படுத்தல்களை முன்னெடுப்பது தொடர்பிலோ அதிகாரிகள் இதுவரையில் எந்த முடிவும் எடுக்கவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வார இறுதியில் கிடைக்கும் தரவுகளைக் கொண்டே இது தொடர்பில் தீர்மானிக்கப்படும். எனினும் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு தேவைப்பட்டால் எந்த நிமிடத்திலும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பொதுமக்கள் ஆதரவு வழங்க வேண்டும். பண்டிகை காலத்தின்போது மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவதை மக்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## தினேஷை சந்தித்த தாய்லாந்து தூதுவர்

கொழும்பு, டிசெ.20

மேம்பட்ட வணிக ஒத்துழைப்பை எளிதாக்கும் நோக்கில் பிராந்திய மற்றும் சர்வதேச அரங்குகளில் நெருக்கமாகப் பணியாற்றுவது குறித்து வெளிநாட்டுத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் இலங்கைக்கான தாய்லாந்தின் தூதுவர் சூலாமணி சார்ட்சுவான் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளும் பிம்ஸ்டெக்கில் பொதுவானதொரு நிலைப்பாட்டை எடுத்துள்ளோம் எனவும், இலங்கையுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம் எனவும், உச்சி மாநாடு விரைவில் கொழும்பில் நடைபெறும் என நம்புகிறோம் என தாய்லாந்து தூதுவர் இதன் போது தெரிவித்தார்.

அத்தோடு தாய்லாந்தின் இன்றைய வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் இலங்கைக்கான முதலீட்டு வாய்ப்புக்களைத் திறக்கின்றன.

தாய்லாந்து முதலீட்டாளர்கள் வவுனியாவில் சர்க்கரைத் தோட்டத்துக்கான முதலீட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆர்வமாக உள்ளனர் எனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-இ)



வவுனியா திருநாவற்குளம் பிள்ளையார் கோயிலில் நேற்று சனிக்கிழமை மாலை கஜமுகா சூரன் போர் நடைபெற்றது.

(ந-402)

## நத்தார் தினத்தில் கைதிகளைப் பார்வையிட அனுமதிகள் ரத்து!

கொழும்பு, டிசெ. 19

நாட்டில் தற்போது காணப்படும் கொவிட் 19 நிலைமையை கருத்திற் கொண்டு நத்தார் பண்டிகையன்று கைதிகளை பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என சிறைச்சாலை திணைக்க ளத்தின் ஊடக பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரை 8ஆயிரம் கைதிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ரி5-இ)





“பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்” எனும். தொனிப்பொருளில் இடம்பெற்ற கவிதை கட்டுரை போட்டியில் வெற்றிபெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வு மாந்தை கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், உதவி பிரதேச செயலாளர் மரியதாஸ் செபமயூரன், பெண்கள் வாழ்வுரிமைக்கழகத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ந-19)

## அரச ஊழியர்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பம்

மன்னார்,டிசெ.20

அரச ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் தேசிய உற்பத்தி திறன் செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து 5 நாள்களை கொண்ட சான்றிதழ் பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளன. நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் சிவபாலன் குணபாலன் தலைமையில் ஆரம்பமான பயிற்சிநெறி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சி நெறியில் அரச திணைக்களங்களில் இருந்து 50 பேர் பங்குபற்றியிருந்தனர். (ஐ-213)



# மானிப்பாய், பண்டத்தரிப்பு சந்தைகளில் தொற்றுநீக்கமும் பி.சி.ஆர் சோதனையும்

வலிகாமம், டிசெ.20

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களின் தலைமையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்பு பொதுச்சந்தைகள் நேற்று தொற்றுநீக்கம் செய்யப்பட்டதுடன் அப்பகுதி வர்த்தகர்களுக்கும் அவர்களுடன் நெருக்கமான 250 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவிக்கையில்,



பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அனைவரதும் பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெறும்வரை இச் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும். முடிவுகள் வெளியாகும்வரை பரிசோதனை மாதிரிகள் பெறப்பட்டவர்கள் வேறு இடங்களில் தனிப்பட்ட ரீதியில் வர்த்தக நடவடிக்கைகளிலோ சமூகத் தொடர்பாடல்களிலோ ஈடுபட வேண்டாம் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தம் உயிர்களை பணயம் வைத்து செயற்படும் வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், துறை சார் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தன்னலமற்ற செயற்பாட்டுக்கு அனைவரும் ஒன்று திரண்டு ஒத்துழைத்து நோய் தொற்றிலிருந்து எமது பிரதேசத்தையும் மக்களையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். என்றார். (ந-115)

# விலங்கு ஒன்றுக்குப் பதிலாக எனது தலையை கொடுப்பேன்

## மேர்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20

உலகநாடுகளுக்கு விலங்குகளின் இறைச்சியை விநியோகிக்கக்கூடியவாறான தொழிற்சாலையொன்று சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது. இத்தகைய செயற்பாடுகள் இந்த பௌத்த பூமியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கு மகாசங்கத் தேரர்கள் ஒருபோதும் அனுமதியளிக்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;



இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றேன்.

மாறாக இது நிறுத்தப்படாவிட்டால், தொழிற்சாலை செயற்பட ஆரம்பிக்கும் முதலாவது நாளில் விலங்கு ஒன்றுக்குப் பதிலாக நான் எனது தலையைப் பலிகொடுப்பேன். முதலில் எனது கழுத்தை அறுத்து இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியிலிருந்து மீண்டுவர வேண்டுமெனில், இவ்வாறான பாவகாரியங்களில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்படக்கூடாது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நினைத்தால் அதனைச் செய்யலாம் - என்றார். (ப)

# ஒரே குடும்பத்தில் 4 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.20

ஹோமாகம, பிடிபன பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுடன் தொடர்புடையவர்கள் என இனங்காணப்பட்ட 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேரை தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தொற்றாளர்களில் ஒருவர் பிடிபன பாடசாலைச் சந்திப் பிரதேசத்தில் அமைந்துள்ள பேக்கரி ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். இதனால் அந்தப் பேக்கரியில் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்ட நபர்களை இனங்காணும் நடவடிக்கையை பொதுச் சுகாதா ரப் பரிசோதகர்கள் முன்னெடுத்துள்ளனர். (ற-இ)

# மத்திய மாகாணத்தில் '1000' தாண்டியது தொற்று!

கண்டி, டிசெ.20

மத்திய மாகாணத்தில் மாத்திரம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 190 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் இன்று காலை வரையில் 47 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கண்டியில் 37, நுவரெலியாவில் 4, மாத்தளையில் 6 தொற்றாளர்கள் இவ்வாறு புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர். மத்திய மாகாணத்தில் கண்டியிலேயே அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கண்டியில் இதுவரையில் 765 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ற-இ)




சமத்துவக் கட்சியின் இளைஞர் அணியினர், கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் நேற்று குருதித் தானம் வழங்கினர். (க-214)



# மழைக்கு சாத்தியம்

கொழும்பு, டிசெ.20

நாட்டில் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலும் மாத்தளை மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ற-இ)

# நூல் நிலையக் கட்டடத்தை நூதனசாலையாக மாற்றவும்

## கோருகின்றது பிரஜைகள் குழு

தலைமன்னார், டிசெ. 21

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட மன்னார் நகர மத்தியில் அமைந்துள்ள முன்னைய நூல் நிலையக் கட்டடத்தை நூதனசாலையாக மாற்றியமைக்க வேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழு கோருகின்றது. இது பற்றி நகர சபையிடம் கோரிக்கை முன்வைப்பது என்றும் மன்னார் பிரஜைகள் குழு, தனது ஆளுநர் சபையில் தீர்மானித்துள்ளது.

மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இயங்கிவந்த மன்னார் நூலகம் வேறொரு கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதனால் அந்தக் கட்டடம் தனியார் வர்த்தகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்திலேயே நூதனசாலை அமைக்க குழு திட்டமிடுகின்றது. (த-60)

# 24 மணிநேரத்தில் 20 பேர் கைது!!

கொழும்பு, டிசெ.20

இலங்கையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 5 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியில் மேலும் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 611 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற-இ)

# அன்டிஜென் சோதனை 2 வாரங்கள் நீடிப்பு!!

கொழும்பு, டிசெ.20

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் நபர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் பரிசோதனையை, மேலும் இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்துக்கு வெளியே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)



# சமூக ஊடகப் பாவனைக்கு வருகின்றது கட்டுப்பாடு!

## கோத்தாபய அரசு ஆலோசனை

கொழும்பு, டிசெ.20

நாட்டில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரைப் பதிவு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் சுயக்கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதுதொடர்பில், கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலு, முகப்புத்தகம் உள்ளிட்ட அனைத்துச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரையும் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை நாம் எமது அமைச்சில் தயாரித்துள்ளோம். சமூக ஊடகங்களுக்கு மாத்திரமே இதனை நாம் தற்பொழுது தயாரித்துள்ளோம். சுயகட்டுப்பாடு தொடர்பில் கடந்த 2010 ஆம் ஆண்டு அமைச்சராக இருந்த போது இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளேன். பலமுறை பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளேன். நாளையும் இதுதொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது. இது முடிவடைந்த பின்னர் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ற-இ)



## மாகாண சபை முறையை ஒழிப்பதா? இல்லையா?

### கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே தீர்மானம் என்கிறார் அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க

கொழும்பு, டிசெ.20

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கும் தீர்மானத்துக்கு அமையவே மாகாண சபை முறையை ஒழிப்பதா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்படும் என அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கினிகத்தேனை பகுதியில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்தி நிகழ்வில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எம்.சி.சி ஒப்பந்தம் எந்த வடிவத்தில் வந்தாலும், அதில் ஒரு போதும் கைச்சாத்திடப் போவதில்லை 5 வருடங்களில் அபிவிருத்தியின் பலன்களை அனுபவிக்க முடியும். ஒப்பந்தம் எந்த வடிவத்தில் கொண்டு வரப்பட்டாலும் அதில் அரசாங்கம் கைச்சாத்திடாது.

தேசிய பொருளாதார ஊக்குவிப்பை பிரதானமாகக் கொண்ட வரவு செலவுத் திட்டத் தையே நாம் முன்வைத்துள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டம் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியது.

தற்போதைய நிலையில் கொரோனாவுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதனை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கேகாலை பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள பாணியையும் கொரோனா ஒழிப்புக்காகவே பயன்படுத்தவுள்ளோம் - என்றார். (ந-இ)

## காலி கல்வி வலயத்தில் பாடசாலைகளுக்கு பூட்டு

காலி, டிசெ.20

காலி கல்வி வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளையும் தொடர்ந்து மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என, தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் யாப்பா தெரிவித்துள்ளார்.

இக் கல்வி வலயத்துக்குட்பட்ட 23 பாடசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், ஜனவரி மாதம் முதல் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## அடக்குமுறையை தொடர்ந்தால் அரசாங்கத்துக்கு ஆப்பு நிச்சயம்!

### எச்சரிக்கின்றது ஐ.ம.ச.

கொழும்பு, டிசெ.20

"உலகில் ஏகாதிபத்திய வழியில் ஆட்சியை முன்னெடுத்த அரசாங்கங்களுக்கு உலக வரலாறு வழங்கியுள்ள தண்டனையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கமும் மீட்டல் செய்து பார்க்க வேண்டும். அதேபோல் மக்களையும், எதிர்க்கட்சிகளையும் அடக்கி ஆள முற்பட்டால் மாபெரும் அரசியல் பூகம்பங்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடலாம்." என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

மேலும் , "ஜனநாயக ஆட்சி முறைமையில் கருத்து சுதந்திரம் மூலம், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். அதற்கான சூழ்நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாறாக அடக்கு முறைகளை கையாளக்கூடாது. நாடாளுமன்றத்தில் தேர்தலை நடத்துவது மாத்திரம் ஜனநாயகம் அல்ல. தேர்தலின் பின்னர் கூட மக்களுக்கு சுதந்திரமாக கருத்து வெளியிடவும், எதிரான நிலைப்பாடுகளை கொண்டிருப்பதற்கான சுதந்திரமும் இருக்க வேண்டும். சிறப்பாக செயற்பட்டால்கூட சில நேரங்களில் தவறுகள் இழைக்கப்படலாம். அதனை மக்கள் சுட்டிக் காட்டும்போது அதனை கௌரவமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்." எனத் தெரிவித்தார் . (ரி5

## கடந்த 17 நாள்களில் 7479 பேர் விடுதலை

கொழும்பு, டிசெ.20

கடந்த 17 நாள்களில் 7 ஆயிரத்து 479 பேர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 6 ஆயிரத்து 915 பேர் சந்தேக நபர்கள் எனவும் ஏனையோர் சிறைத்தண்டனை பெற்றவர்கள் எனவும் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியை குறைக்கும் நோக்கில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் கீழ், இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, சிறைக்கைதிகளில் மேலும் 74 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதனடிப்படையில், சிறைச்சாலை கொத்தணியுடன் தொடர்புடைய 3 ஆயிரத்து 372 தொற்றாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர் எனதிணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)





## முல்லைத்தீவில் வயல் விழா

முல்லைத்தீவு, டிசெ.20

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய திணைக்களத்தின் வயல் விழாவும் வேளாண் பொருள் விற்பனை நிலைய திறப்பு விழாவும் ஒட்டிசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் உகநாதன் தலைமையில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் வடமாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர். தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மிளகாய் விதைகளும் பெரிய வெங்காய விதைகளும் வழங்கப்பட்டன. (ந-222)

# தொற்றாளர்கள் எங்கும் இருக்கலாம் சுகாதார விதிகளைப் பின்பற்றுங்கள்

## சுகாதார அமைச்சு வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.20

கொரோனாத் தொற்றாளர்கள் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் இருக்கக் கூடும். எனவே சுகாதார ஒழுங்கு விதிகளை கட்டாயம் பின்பற்றுங்கள் என சுகாதார அமைச்சு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளதாவது,

மேல் மாகாணம் அபாய வலயமாக அடையாளப்படுத்தப்பட்டாலும், நாட்டின் ஏனைய சில பகுதிகளில் சிறு சிறு கொத்தணிகள் இனங் காணப் பட்டுள்ளன. கொழும்பிலிருந்து பெரும்பாலானவர்கள் வெளி மாவட்டங்களுக்கு சென்றுள்ளதால், அவர்களும் உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுகாதார விதிகள் உரிய முறையில் பின்பற்றப்படுதல் அவசியம். இல்லையெனில் மீண்டும் கொரோனாக் கொத்தணிகள் ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



## படைப்புழு பாதிப்பால் சோளச் செய்கை அழிவு

### விவசாயிகள் கவலை

திருகோணமலை, டிசெ.20

படைப்புழுத் தாக்கத்தால் சோளப் பயிர்ச்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என திருகோணமலை விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். விவசாய திணைக்களத்தினரது அறிவுறுத்தலுக்கு அமைவாக விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதிலும் அது பயனளிக்கவில்லை. இதனால் தாம் நிர்க்கதியாகியுள்ளோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதையடுத்து திருகோணமலை பிரதி விவசாயப்பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் பாதிப்புத் தொடர்பில் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். அதன் பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

படைப்புழுத் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு இரசாயனங்களை இரு முறை பயன்படுத்துமாறு அறிவுறுத்தினோம். ஆனால் அதன் விலை அதிகம் என்பதால் பெரும்பாலான விவசாயிகள் அதனை இருமுறை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் படைப்புழுக்கள் அழிவடையாது பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. விவசாயிகளுக்கு இது தொடர்பான தொடர் பயிற்சி வகுப்புகளை வழங்கவும், நடமாடும் விரிவாக்க சேவைகளை நடாத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றார். (வ-இ)

## அதிசொகுசு பஸ் சேவை அடுத்த ஆண்டு ஆரம்பம்

கொழும்பு, டிசெ.20

கொழும்பு நகரில் அதிசொகுசு பஸ் சேவையை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்க பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

பார்க் அன்ட் ரைட் எனும் புதிய பெயரில் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். அதற்கமைய, முதற்கட்டமாக 25 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன. மொரட்டுவை மற்றும் மாகும்புற தொடக்கம் கொழும்பு நகர் வரை இந்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. இதைப் பயன்படுத்துவோரின் தனிப்பட்ட வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான பிரத்தியேக தரிப்பிடங்களும் வழங்கப்படவுள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வஇ)

## மஹர சிறை அதிகாரிகளின் 53 துப்பாக்கிகள் சி.ஐ.டியிடம்

கொழும்பு, டிசெ.20

மஹர சிறைச்சாலை அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்ட 53 துப்பாக்கிகளை புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். விசேட நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவை கைப்பற்றப் பட்டன.

அத்துடன், மஹர சிறைக் கலவரம் தொடர்பில் இதுவரையில் 500 க்கும் மேற்பட்டோரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள் ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## பாடசாலைகள் நாளை திறப்பு

வவுனியா, டிசெ. 20

வவுனியாவில் கொரோனா தொற்றுடன் மாணவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள் நாளை முதல் மீண்டும் செயற்படும் என்று வலய கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைவாக வவுனியா தெற்கு வலயக் கல்வி திணைக்களத்துக்கு உட்பட்ட 5 பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையில் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பிரகாரம் நாளை திங்கட்கிழமை முதல் அவற்றைத் திறந்து கல்விச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன, என்றார். (ஒ,110)

## கொழும்பு முதியோர் இல்லத்தில் 42 பேர் கொரோனாவின் பிடியில்

கொழும்பு , டிசெ.20

கொழும்பு முகத்துவாரம் பகுதியிலுள்ள முதியோர் இல்லமொன்றில் 42 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முதியோர் இல்லத்தில் அண்மையில் உயிரிழந்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப் பட்டது. அதையடுத்து அங்குள்ள 98 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் மேலும் 45 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அந்தப் பகுதிக்கான சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## மத்திய அதிவேக வீதியின் கட்டுமான பணி ஆரம்பம்

கொழும்பு, டிசெ.20

பொத்துஹெர தொடக்கம் கலகெதர வரையான பகுதியை இணைக்கும் மத்திய அதிவேக வீதியின் மூன்றாம் கட்ட கட்டுமான பணிகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

முன்னரே ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிகள் பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, அதற்கான பணிகளை விரைவாகத் தொடங்குமாறு பிரதமர் சமீபத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார். இதையடுத்து கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த 48 மாதங்களுக்குள் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ-இ)



# கொரோனாத் தொற்றைத் தடுக்க காலியில் மோட்டார் படையணி

காலி, டிசெ.20

காலி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் கொரோனாத் தொற்றைத் தடுக்க 10 மோட்டார் சைக்கிள்களைக் கொண்ட ஒரு படையணி ஒன்று நிறுவப்பட்டுள்ளது என தெற்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் ஆர்.சி. டி சொய்சா தெரிவித்துள்ளார். இம்மோட்டார் சைக்கிள் குழு தேவையின்றி கூட்டம் கூடுதல், தேவையற்ற பயணங்களை மேற்கொள்ளுதல் மற்றும் சுகாதார விதிகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றைக் கண்காணிக்கவுள்ளன. மேலும் எழுமாற்றாக மக்களின் உடல் வெப்பநிலையையும் எழுந்தமானமாக பரிசோதிக்கும்.

இந்த மோட்டார் சைக்கிள் அணிக்குத் தேவையான செலவுகள் தெற்கு மாகாண சபையால் வழங்கப்படும் என்றும் தலைமைச் செயலாளர் தெரிவித்தார். (நஇ)



# சமுர்த்தி பயனாளிகளுக்கு காசோலைகள்

கொடிகாமம், டிசெ 20

யாழ். மாவட்டத்தில் வீட்டு லொத்தர் கொடுப்பனவுக்கு குலுக்கல் முறையில் தெரிவான சமுர்த்திப் பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தெரிவான முப்பது அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளை வழங்கினர்.

செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கான லொத்தர் காசோலைகளே இவ்வாறு வழங்கப்பட்டன. (ச-159)



# தம்மிக்கவின் மருந்தில் கலப்படம் இல்லையாம்

## கொரோனாவை அழிக்குமா என்பது இனித்தான் தெரியும்!

கொழும்பு, டிசெ.20

கேகாலையைச் சேர்ந்த ஆயுள்வேத மருத்துவரான டி.எம்.தம்மிக்க பண்டார மூலிகை மருந்து ஒன்றைத் தயாரித்ததுடன், அது கொரோனாவை அழிக்கும் என்றும் கூறியிருந்தார். இந்த மருந்து தொடர்பான ஆய்வறிக்கையின் முதற்பகுதி வெளியிடப்பட்டுள்ளது என்று ஔடத உற்பத்திகள் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், முதற்கட்ட ஆய்வுகளுக்கு அமைய இந்த மருந்தில் எந்தவித கலப்படமும் இருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இந்த மருந்தை சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் அருந்தியிருந்தார். சபாநாயகர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அதை அருந்தினர். அந்த ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தன.

அதையடுத்து அந்த மருந்து பிரபலமடைந்ததுடன், அவரது வீட்டுக்கு முன்னர் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் மருந்துக்காகத் திரண்டனர்.

அதையடுத்து அவர்களைப் பொலிஸார் விரட்டியதுடன், மருந்தை வழங்கவும் தடைவிதித்தனர். அந்த மருந்து கொரோனாவை ஒழிக்கும் என்று விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படாததால், அது தொடர்பான ஆராய்வுகளை மேற்கொள்ளுமாறு அரசு பணித்திருந்திருந்தது. அந்த ஆராய்வுகளின் முதற் கட்ட அறிக்கையே இப்போது வெளிவந்துள்ளது.

ஆனால் கொரோனாவைக் கொல்லும் அளவுக்கு தகுதியுடையதா என்கின்ற இரண்டாம் கட்டப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஔடத உற்பத்திகள் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்த மூலிகை மருந்தை வழங்க வேண்டும் என்று கோரி, தம்மிக்கவின் வீட்டுக்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற-இ)

# அவிசாவளை கைத்தொழில் பேட்டையில் கொத்தணி அபாயம்

கொழும்பு, டிசெ.20

அவிசாவளையில் உள்ள கைத்தொழில் பேட்டையில் கொரோனாக் கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. அங்கு பணிபுரிவோர் காணப்படும் களுகல உட்பட பல்வேறு பிரதேசங்களிலும் திடீர் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் போது பலர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். மேலும் எட்டியாந்தோட்டை, தல்துவ உட்பட அவிசாவளை ஆடைத் தொழிற்சாலைகளுக்கு செல்வோரில் பலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (வ-இ)



மன்னார் மாவட்டத்தில் அடம்பன் பகுதியை சேர்ந்த அங்கவீனமுற்ற ஒருவருக்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக கடந்த புதன்கிழமை சக்கர நாற்காலி வழங்கட்டது. இதற்கான நிதியை நெதர்லாந்து மிசன்மெயில் நிறுவனத்தினர் வழங்கினர். (ரி5-222)



# சாதாரண தர மாணவர்களுக்கு கணிதப் பயிற்சிப் புத்தகங்கள்

மன்னார், டிசெ. 20

மன்னார் அல் அஸ்ஹார் தேசிய பாடசாலையில் இவ் வருடம் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கணித பாட மாதிரி வினாத்தாள்கள் அடங்கிய பயிற்சி புத்தகங்கள் நேற்று சனிக்கிழமை மன்னார் அயனிஸ்கா மாணவர் தொண்டு நிறுவனத்தால் கையளிக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் எம்.வை.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் அயனிஸ்கா மாணவர் தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் யதீஸ் 35 மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கினார். (ச-56)




சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு, உழைக்கும் மகளிர் அமைப்பினரால் உலர் உணவுப் பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (ரி5)

# ஹந்துருவவில் இரு பகுதிகள் முடக்கப்பட்டன

*காலி, டிசெ.20*

ஹந்துருவ பிரதேசத்தில் துன்துவ மேற்கு மற்றும் துன்துவ கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக கொரோனாத் தொற்று பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் அறிவித்துள்ளது. அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம்.நாலக கலுவெவ, நேற்று நள்ளிரவு விடுத்த ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (வஇ)

# ஒன்றாக உண்பதாலும் கொரோனா தொற்றும்

## மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவிப்பு

*கொழும்பு, டிசெ.20*



கொரோனா பரவுவதற்கான வாய்ப்பு ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் சந்தர்ப்பங்களில் அதிகம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திருமண நிகழ்வுகளில் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. அதில் கலந்துகொள்பவர்கள் கொரோனா பரவலை பாரதூரமான விடயமாக கருதுவதில்லை. திருமணநிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

எண்ணிக்கை இங்கு முக்கியமில்லை சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவதே அவசியம்.

அடுத்த இரு ஆண்டுகளுக்கு கொரோனாவுடன் வாழ வேண்டிய நிலையேற்படலாம்.

இந்த ஆபத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால் சூழலை மாற்றுவதும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதும் அவசியம் என்றார். (வ-இ)

# அடுத்த ஆண்டு நாட்டில் மூன்று பெரிய முதலீடுகள்

*கொழும்பு, டிசெ.20*

புதிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் மூன்று வெளிநாட்டு முதலீடு திட்டங்கள் அடுத்த ஆண்டு நாட்டுக்கு கிடைக்கவுள்ளன என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

பெரியளவிலான இந்த மூன்று திட்டங்களினூடாக நாட்டுக்கு 550 பில்லியன் ரூபா கிடைக்கவுள்ளதுடன், சுமார் ஒரு லட்சம் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

துறைமுக நகரில் சர்வதேச மாநாட்டு மண்டபம், அம்பாந்தோட்டை தொழிற்பேட்டையின் இறப்பர் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் மருந்து உற்பத்தி நிலையம் என்பனவே இந்த மூன்று நிகழ்ச்சித் திட்டங்க ளாகும். (வ-இ)


# ஆபத்தற்ற இடங்களும் கொரோனா அபாயத்தில்

## *மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

*கொழும்பு, டிசெ.20*

கொரோனா ஆபத்து இல்லை என அறிவிக்கப்பட்ட இடங்களிலும் புதிய தொற்றாளர்கள் உருவாகும் சூழல் காணப்படுகிறது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. இந்த நிலை குறித்து கவனம் செலுத்தி அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என மருத்துவர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டியுள்ளார். காலி, பொலநறுவை, கண்டி இரத்தினபுரி போன்ற பகுதிகளில் அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

சிறிய சிறிய கொத்தணிகள் உருவாகின்றன. வெள்ளவத்தையில் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட 300 பிசிஆர் சோதனைகளின் போது 12 நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



# கொரோனாவை துரத்த சிறிது காலம் எடுக்கும்

## அதுவரை அவதானம் என்கிறார் பாதுகாப்பு செயலர்

*கொழும்பு, டிசெ.20*

கொரோனாவை நாட்டிலிருந்து அகற்றுவதற்கு சிறிது காலமாகலாம். அதுவரை பொதுமக்கள் உரிய சுகாதார வழிகாட்டுதல்களை இறுக்கமாக கடைபிடிக்க வேண்டும். நோய் தொடர்பான தகவல்களை மறைக்க வேண்டாம் என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண கேட்டுக்கொண்டுள்ளார். சமூகநிகழ்வுகளில் ஒன்றுகூடுவதை தவிர்த்து பொதுமக்கள் வீடுகளில் இருக்க வேண்டும். முதியவர்கள் மற்றும் தொற்றாநோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் முப்படையினரும் சுகாதார அதிகாரிகளும் கொரோனாவை ஒழிப்பதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

# ஹற்றனில் மூன்று கடைகளுக்கு பூட்டு!

*கற்றன், டிசெ.20*

ஹற்றன் டிக்கோயா நகரசபைக்குட்பட்ட ஹற்றன் நகரில் அமைந்துள்ள மூன்று கடைகள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நேற்று மாலை மூடப்பட்டன.

வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் நபர்களிடம் எழுமாறாக மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது இந்தத் தொழிற்சாலையில் ஆண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று பரவியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து இந்த நபர் ஹற்றன் நகரில் இரண்டு புடவை கடைகளுக்கும், ஒரு செருப்பு விற்பனை நிலையத்துக்கும் சென்றுள்ளார் எனக் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்தக் கடைகள் ஹற்றன் டிக்கோயா நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மூடப்பட்டதுடன் அதில் கடமை புரிந்த 33 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த நபர் ஹற்றன் நகரிலுள்ள இலங்கை வங்கிக்கும் சென்றுள்ளார் எனினும் அந்த வங்கியில் முறையாக சுகாதார வழிமுறைகள் பின்பற்றியதன் காரணமாக அவருடன் தொடர்பு கொண்ட இரண்டு ஊழியர்கள் மாத்திரம் கண்டு பிடிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)



# பொலிஸில் மாட்டியது பெருந்தொகை பணம்

*கொழும்பு, டிசெ. 20*

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து பெருந்தொகையான பணம் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

300 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தில் பெண் ஒருவர் உட்பட மூன்று பேர் மாலபை மற்றும் கடுவலை பிரதேசங்களில் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து 5 கோடியே 80 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனவும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

# பீலே சாதனையை சமன் செய்த மெஸ்சி

மாட்ரிட், டிசெ.20

உலகின் முன்னணிக் கால்பந்து வீரர்களில் ஒருவரான லியோனல் மெஸ்சி ஒரே அணிக் காக விளையாடி 643 கோல்கள் அடித்து பிரேசில் கால்பந்து வீரர் பீலேயின் சாத னையை சமன் செய்தார்.



ஆஜெண்டினா நாட்டைச் சேர்ந்த இவர் ஸ்பெய்னில் உள்ள பார்சிலோனா கழக அணிக்காக விளையாடி வருகிறார். தற்போது ஸ்பெய்னில் லாலிகா கழக கால்பந்து போட்டி நடைபெற்று வருகிறது. இதன் ஒரு ஆட்டத்தில் பார்சிலோனா வாலன்சியா அணிகள் மோதின. இந்த ஆட்டம் 22 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

இந்த போட்டியில் மெஸ்சி ஒரு கோல் அடித்தார். பார்சிலோனா அணிக்காக அவர் அடித்த 643 ஆவது கோலாகும். இதன்மூலம் மெஸ்சி பிரேசில் கால்பந்து சகாப்தம் பீலேயின் சாதனையை சமன் செய்துள்ளார். (ற-இ)



# டெஸ்ட்டிலிருந்து விலகினார் ஷமி

புதுடில்லி, டிசெ.20

இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி காயம் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

ஆஸ்திரேலியா -இந்தியா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் ஆட்டம் அடிலெய்டில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. 2 ஆவது சுற்றில் 36 ஓட்டங் கள் மட்டுமே எடுத்த இந்திய அணி படுதோல்வியைச் சந்தித்தது.

இந்த 2 ஆவது சுற்றில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஷமி துடுப்பாட்டம் செய்தபோது ஆஸ்திரேலிய வீரர் பட் கம்மின்ஸ் வீசிய பந்தில் கையில் காயம் அடைந் தார். இதன்போது ஷமிக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள் ளமை தெரியவந்தது. இதனால், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான எஞ்சிய 3 டெஸ்ட் போட்டியில் இருந்தும் ஷமி விலகியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து முகமது ஷமி விலகியதையடுத்து அவருக்கு பதிலாக மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான முகமது சிராஜ்க்கு வாய்ப்பு வழங்கப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ற-இ)



# எல்.பி.எல்லில் பங்குபற்றிய யாழ். வீரர்கள் கௌரவிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.20

லங்கா பிறிமியர் லீக் போட்டிகளில் வடக்கு மாகாணம் சார்பில் யாழ்ப்பாண ஸ்ரலியன்ஸ் அணிக்காக பங்கு கொண்ட வீரர்களைக் கௌர விக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

எல்.பி.எல். தொடரில் பங்கேற்ற வியாஸ்காந்த், கபில்ராஜ், டினோசன், விஜேராஜ் ஆகிய வீரர்க ளும், இவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட ரதீபனும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு யூரா நிறுவன அனுசரணையுடன் யாழ் துடுப்பாட்ட சங்க ஏற்பாட்டில் அரியாலை யிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது. வாகனத் தொடரணி மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்ட வீரர்கள் மேள வாத்தியம் முழங்க நிகழ்வு இடத்துக்கு அழைத்து வரப்பட் டனர். (ற-20)

# வவுனியாவில் சதுரங்க வர்ணநிகழ்வு நேற்று!

வவுனியா, டிசெ.20

வவுனியா மாவட்ட சதுரங்க சம்மேளனம் மற்றும் ஐபி சதுரங்க கல்லூரியின் ஏற்பாட் டில் சதுரங்க வர்ண நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மாகாண மற்றும் பிரதேச மட்டங்களில் இடம் பெற்ற சதுரங்க சுற்றுப் போட்டி களில் வெற்றி பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், வெற்றிக்கிண்ணங்களும் வழங் கப்பட்டன.

சம்மேளனத்தின் செயலாளர் ஜானுயன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக மாவட்ட அரச அதிபர் சமன்பந் துலசேனவும், சிறப்பு அதிதிகளா கப் பிரதேச செயலாளர் ந.கமல தாசன், உதவிப் பிரதேச செயலா ளர் எஸ்.பிரியதர்சினி, ஆர்.பிர சன்னா, சமூக ஆர்வலர் சந்திரகு மார் கண்ணன் ஆகியோரும் கலந்துகொண்டார். (ற-110)











# ஸ்ரலியன்ஸ் அணியின் தொடர்பாடல் அதிகாரி கௌரவிப்பு!

வவுனியா, டிசெ.20

லங்கா பிரிமியர் லீக் போட்டிகளில் வடக்கு மாகாணம் சார்பில் யாழ்ப்பாணம் ஸ்ரலியன்ஸ் அணி யின் தொடர்பாடல் அதிகாரியாக செயற் பட்ட யோகேந்திரன் ரதீபனை கௌரவிக் கும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.



இந்த நிகழ்வு வவு னியா வைரவப்புளி யங்குளத்தில் அமைந்துள்ள யங்ஸ் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத் தில் நடைபெற்றது.

இதன்போது ரதீபனுக்கு பொன் னாடை போர்த்தி, மாலை அணி வித்து கௌரவித்ததுடன், நினை வுச்சின்னமும் வழங்கப்பட்டது.

யங்ஸ் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பி னர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர் கள், விளையாட்டுக் கழக உறுப்பி னர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ற18)




# நேரடி ஒளிபரப்பில் தடுப்பூசி மைக் பென்ஸ் புதுமுயற்சி!

வொஷிங்டன், டிசெ. 20

அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் மற்றும் அவரது மனைவி கரீன் பென்ஸ் ஆகியோர் நேரலை ஒளிபரப்பில் வைத்து கொரோனாவுக்குத் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர்.

அமெரிக்க மக்களுக்கு கொரோனா தடுப்பூசி மீதான நம்பகத்தன்மையை அதிகரிக்கும் வகையிலும், தடுப்பூசி பாதுகாப்பானது என்பதை நிரூபிக்கும் வகையிலும் அவர்கள் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளனர். (ம-வஇ)

## முதல் நபராக
# தடுப்பூசி பெற்றார் இஸ்ரேல் பிரதமர்

ஜெருசலேம், டிசெ. 20

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது நாட்டில் முதல் நபராக கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

பைசர் மற்றும் பயோஎன்டெக் நிறுவனங்கள் உருவாக்கிய தடுப்பூசியை 71 வயதான நெதன்யாகு போட்டுக் கொண்டதுடன், அவர் தனது நண்பர்களையும் தடுப்பூசியை போட்டுக் கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

சுமார் 9 மில்லியன் சனத்தொகை கொண்ட இஸ்ரேலில் 3 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்த மாத தொடக்கத்தில் இருந்து நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# விளம்பரங்களுக்காக கூகுளில் முறைகேடு
### அமெரிக்க மாநிலங்கள் குற்றச்சாட்டு

நியூயோர்க், டிசெ. 20

இணைய விளம்பரங்களைக் கவர்வதற்காக கூகுள் நிறுவனம் முறைகேட்டில் ஈடுபட்டது என அமெரிக்காவின் டெக்சாஸ் உள்ளிட்ட 10 மாநிலங்கள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

லட்சக்கணக்கான இணையதளப் பயனர்களின் தனியுரிமையைப் பாதுகாக்கத் தவறியதுடன், பேஸ்புக் நிறுவனத்துடன் இணைந்து முறையற்ற தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என கூகுள் மீது முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இணைய விளம்பரங்கள் மூலம் கூகுள் நிறுவனம் நடப்பாண்டில் 420 கோடி டொலர் வருவாய் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை கூகுள் மறுத்துள்ளது. 'வணிகங்களுக்கு உதவுவதுடன் பொதுமக்களுக்கு பயனளிக்கும் அதிநவீன விளம்பர தொழில்நுட்ப சேவைகளில் நாங்கள் முதலீடு செய்துள்ளோம். கடந்த தசாப்தத்தில் டிஜிட்டல் விளம்பர கட்டணங்கள் குறைந்து விட்டன.

விளம்பர தொழில்நுட்ப கட்டணங்களும் குறைந்து வருகின்றன. கூகுள் விளம்பர தொழில்நுட்ப கட்டணங்கள் சராசரியை விட குறைவாக உள்ளன. எனவே நீதிமன்றத்தில் எங்களை நாங்கள் தற்காத்துக்கொள்வோம்' எனத் தெரிவித்துள்ளது. (ம-வஇ)



# காபூலில் அமெரிக்க விமானத்தளம் மீது ரொக்கட் தாக்குதல்

காபூல், டிசெ. 20

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள அமெரிக்காவின் மிகப்பெரிய விமானத் தளத்தை இலக்கு வைத்து நேற்று அதிகாலை ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஐந்து ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதும் விமானத் தளத்துக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

ஜிஹாதி இஸ்லாமிய அரசு குழு முன்பு ஏப்ரல் மாதத்தில் இதேபோன்ற ரொக்கெட் தாக்குதலை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-வஇ)



# ஜப்பானில் கடும் பனிப்புயல் வீதியில் சிக்கிய சாரதிகள்!

டோக்கியோ, டிசெ. 20

ஜப்பானில் கடும் பனிப்புயல் காரணமாக ஏற்பட்ட வாகன நெரிசலால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உணவு மற்றும் குடிநீர் இன்றி நெடுஞ்சாலையில் ஓர் இரவைக் கழித்துள்ளனர்.

டோக்கியோ மற்றும் நிகாட்டா மாவட்டத்தை இணைக்கும் நெடுஞ்சாலையில் கடந்த புதன் கிழமை இந்த வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை காலையிலேயே இந்த நெரிசல் முடிவுக்கு வந்துள்ளது. நெடுஞ்சாலையின் மத்தியில் பனிக்குவியலில் கார் ஒன்று சிக்கியதை அடுத்தே இந்த வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் படிப்படியாக வாகனங்கள் அந்த நெரிசலில் சிக்கிக்கொள்ள அது 9 மைல்கள் தூரம் வரை நீண்டு சென்றது என நெடுஞ்சாலை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (வஇ)



# காபூலில் குண்டுத்தாக்குதல் 9பேர் சாவு: 30 பேர் காயம்

காபூல், டிசெ. 20

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடந்த குண்டுவெடிப்பில் ஒன்பது பேர் உயிரிழந்துடன், ஆப்கானிஸ்தான் சட்டமன்ற உறுப்பினர் ஹாஜி கான் மொஹம் வர்தக் உட்பட 30 பேர் காயமடைந்துள்ளனர் என ஆப்கானிஸ்தான் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த குண்டுவெடிப்பானது வர்தக்கின் வாகனத்தை குறிவைத்து முன்னெடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்துக்கு எந்தவொரு அமைப்பும் இது வரை பொறுப்பேற்கவில்லை. ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, கடந்த மூன்று மாதங்களில் தலிபான்கள் நடத்திய 35 தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் 507 வெடிகுண்டு வெடிப்புகளில் 480க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதோடு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். (ம-வஇ)